# அரசு மேல்நிலைப்பள்ளி கருவேப்பிலங்குறிச்சி

## தனிமங்களின் ஆவர்த்தன வகைப்பாடு

### I. சரியான விடையைத் தேர்ந்தெடு.

1. ஆவர்த்தன அட்டவணையில் உள்ள தொடர்கள் மற்றும் தொகுதிகள் எண்ணிக்கை ________

   அ. 6,16 ஆ. 7,17
   இ. 8,18 ஈ. 7,18

2. நவீன ஆவர்த்தன விதியின் அடிப்படை ______

   அ. அணு எண்
   ஆ. அணு நிறை
   இ. ஐசோடோப்பின் நிறை
   ஈ. நியூட்ரானின் எண்ணிக்கை

3. ஹேலஜன் குடும்பம் எந்த தொகுதியைச் சேர்ந்தது

   அ. 17வது ஆ. 15வது
   இ. 18வது ஈ. 16வது

4. ______ என்பது ஆவர்த்தன பண்பு

   அ. அணு ஆரம்
   அ. அயனி ஆரம்
   இ. எலக்ட்ரான் நாட்டம்
   ஈ. எலக்ட்ரான் கவர்தன்மை

5. துருவின் வாய்ப்பாடு ______

   அ. $FeO.xH_2O$ ஆ. $FeO_4.xH_2O$
   இ. $Fe_2O_3.xH_2O$ ஈ. $FeO$

6. அலுமினோ வெப்ப வினையில், அலுமினியத்தின் பங்கு

   அ. ஆக்ஸிஜனேற்றி ஆ. ஆக்ஸிஜன் ஒடுக்கி
   இ. ஹைட்ரஜனேற்றி ஈ. சல்பர் ஏற்றி

7. மெல்லிய படலமாக துத்தநாக படிவை, பிற உலோகத்தின் மீது ஏற்படுத்தும் நிகழ்வு ______ எனப்படும்.

   அ. வர்ணம் பூசுதல் ஆ. நாகமுலாமிடல்
   இ. மின்முலாம் பூசுதல் ஈ. மெல்லியதாக்கல்

8. கீழ்க்கண்ட மந்த வாயுக்களில், எது வெளிப்புற ஆற்றல் மட்டத்தில் இரண்டு எலக்ட்ரான்களைக் கொண்டது.

   அ. He ஆ. Ne இ. Ar ஈ. Kr

9. நியான் வாயுவின் எலக்ட்ரான் நாட்டம் பூஜ்ஜியம் ஆக காரணம் ______

   அ. நியுட்ரானின் உறுதியான வரிசை அமைப்பு
   ஆ. எலக்ட்ரானின் உறுதியான கட்டமைப்பு
   இ. குறைந்த உருவளவு
   ஈ. அதிக அடர்த்தி

10. இரசக்கலவை உருவாக்கலில் தேவைப்படும் முக்கியமான உலோகம் ______

   அ. Ag ஆ. Hg இ. Mg ஈ. Al

### II. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. ஒரு மூலக்கூறில் இரு பிணைப்புற்ற அணுக்கட்டு இடையில் உள்ள எலக்ட்ரான் கவர்ஆற்றல் வித்தியாசம் 1.7 க்கு மேல் எனில், பிணைப்பின் இயல்பு ______ ஆகும்.

2. நவீன ஆவர்த்தன அட்டவணையின் அடிப்படை ______ ஆகும்.

ஆக்கம்; ரா.மணிகண்டன் பட்டதாரி ஆசிரியர்